**SPLCC.NO:19/2025**

**PW17 : திரு.ரஜினிகாந்த்**

நாள் : 11.09.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**
**2, 3, 4, 6, 7 எதிரிகள் ஆஜர். 5வது எதிரி ஆஜர் இல்லை. Sec.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.**
**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி –**

கு.வி.மு.ச பிரிவு 91ன் படி எழுத்து மூலமான கடிதம் கொடுத்து தான் ஆவணங்களை கைப்பற்ற வேண்டும் என்றால், சரிதான். அந்த நடைமுறையை நான் இந்த வழக்கில் பின்பற்றவில்லை என்றால், அது சரியல்ல. நான் முதல் விசாரணையில் இந்த வழக்கில் சாட்சிகளை எந்தெந்த தேதிகளில், எந்தெந்த இடத்தில் விசாரித்தேன் என சொல்லவில்லை என்றால், குறிப்பிட்டு நான் அவ்வாறு சாட்சியம் அளிக்கவில்லை. நான் இந்த வழக்கில் சாட்சிகளை 2012ம் வருடத்தில் விசாரித்தேன். சாட்சிகளின் வாக்குமூலங்களை உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால், சரிதான். இந்த வழக்கில் நான் விசாரித்த சாட்சிகளின் வாக்குமூலங்களை உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பினேனா என்றால், எனக்கு நினைவில்லை. பொதுவாக குற்றப்பத்திரிக்கையுடன் தான் சாட்சிகளின் வாக்குமூலங்களையும், ஆவணங்களையும் நீதிமன்றத்திற்கு அனுப்புவார்கள். நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், அது சரியல்ல. 14.07.2021 தேதியில் தான் நான் விசாரித்த சாட்சிகளின் வாக்குமூலங்கள் நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் இந்த வழக்கில் எந்தவித விசாரணையும் செய்யவில்லை

என்றால், அது சரியல்ல. பொருளை, ஆவணங்களை கைபற்ற வேண்டும் என்றால் மகசர் மூலம்தான் கைப்பற்ற வேண்டும் என்றால், அது சரியல்ல. சாட்சிகள் விசாரிக்கும் போது கொடுக்கும் ஆவணங்களை அப்படியே கைப்பற்றிக்கொண்டேன். அவ்வாறு கைப்பற்றியது தவறு என்றாலும், மகசர் மூலம்தான் சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்ற வேண்டும் என்றால், அது சரியல்ல. சம்பவம் இடம் குறித்து பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால், இவ்வழக்கில் குறிப்பிட்ட சம்பவ இடங்கள் இல்லை. Vigilance Manualல் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்ய வேண்டும் என்றால், இந்த வழக்கில் அந்த நடைமுறை பொருந்தாது. ஒருவரின் மாதிரி கையொப்பத்தை முறைப்படி வேண்டுகோள் கடிதம் கொடுத்து, நீதிமன்றம் முன்னிலையில் தான் மாதிரி கையொப்பம் பெற்று தடய அறிவியல் துறைக்கு அனுப்ப வேண்டும் என்றால், அது தவறு. அதே மாதிரி அந்த குறிப்பிட்ட காலத்திற்கு உண்டான Admitted documentsகளையும் மாதிரி கையொப்பம் ஒப்பீடு செய்வதற்காக கைப்பற்ற வேண்டும் என்றால், சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றியதாக சொல்லப்படும் போலி பில்களை தடய அறிவியல் துறைக்கு இந்த நீதிமன்றம் மூலம் அனுப்பவில்லை என்றால், அது சரியல்ல. இவ்வழக்கில் கைப்பற்றியதாக சொல்லப்படும் போலி பில்களை தடய அறிவியல் துறைக்கு இந்த நீதிமன்றம் மூலம் அனுப்பியதாக நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால், அது சரியல்ல. நான் பொய் சொல்கிறேன் என்றால், அது சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எனக்கே தெரிந்தவகையில் தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றாலும், அந்த ஆவணங்கள் சட்டப்படி

செல்லத்தக்கவை அல்ல என்றாலும், அது சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை யாரும் விசாரித்தார்களா என்றால், எனக்கு நினைவில்லை. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், அது சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet